**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் சென்னை – 25**

**சுற்றறிக்கை எண்: 100521 / ஆர்4 / 2022 நாள். 29.01. 2022**

**பொருள் :** தொழில்நுட்பக் கல்வித்துறை – தேர்வுப்பிரிவு —இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து வணிகவியல் பயிலகங்கள் செயல்பட அனுமதித்தல் – தொடர்பாக.

**பார்வை :1** தமிழகஅரசு செய்தி வெளியீடு எண்.026 நாள்.05.01.2022

**2** இவ்வலுவலக சுற்றறிக்கை எண்: 100521 / ஆர்4 / 2022 நாள்.06.01. 2022

**3** தமிழகஅரசு செய்தி வெளியீடு எண்.187 நாள்.27.01.2022

*******

பார்வை (1)ல் காணும் தமிழகஅரசின் செய்தி வெளியீட்டில் தமிழ்நாட்டில் கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும், பரவிவரும் உருமாறிய கொரோனா ஒமைக்ரான் வைரஸ் நோயை கருத்தில் கொண்டும் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் அரசு புதிய பல கட்டுப்பாடுகளை விதித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழகத்தில் இயங்கும் பயிற்சி நிலையங்கள் (Training and Coaching centers ) செயல்பட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரசு செய்தி வெளியீட்டில் தெரிவித்துள்ளவாறும், மாணாக்கர்களின் நலன் கருதியும் இத்துறையின் கீழ் செயல்படும் அனைத்து வணிகவியல் பயிலகங்கள் (துட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல்) அரசின் மறு அறிவிப்பு வெளியிடும் வரை செயல்பட தடை விதித்து பார்வை (2)ல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கை மூலம் அனைத்து தட்டச்சு பயிலகங்களின் உரிமையாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

தற்பொழுது பார்வை (3)ல் காணும் தமிழக அரசின் செய்தி வெளியீட்டு பக்க எண்.4 வரிசை எண்.2ல் தொழில் பயிற்சி மற்றும் பயிற்சி நிலையங்கள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (SOP) பின்பற்றி, 01.02.2022 முதல் பயிலகங்கள் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இத்துறையின் கீழ் அங்கீகாரம் பெற்று செயல்பட்டு வரும் அனைத்து தட்டச்சு பயிலகங்களும் அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றி 01.02.2022 முதல் செயல்பட இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

**தலைவர்**
**தேர்வு வாரியம்**